# மணவாட்டி

## என்பதின் பேரிலான கேள்விகளும் பதில்களும்



# மணவாட்டி மறுரூபப்படுதலின் இரகசியத்தை தயவு கூர்ந்து விளக்கவும்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: 64-08-30 M கேள்விகளும் பதில்களும் COD #22

362. மணவாட்டி மறுரூபப்படுதலின் இரகசியத்தை தயவு கூர்ந்து விளக்கவும்.

242. அது ஒரு மாறுதல் மட்டுமே (பாருங்கள்?), நமது சரீரங்கள்... நமது என்று நாம் சொல்வோம். அதை நான் கூறும் போது என்ன குறிப்பிடுகிறேன் என்று உங்களுக்குத் தெரிகிறதா? நான் அவபக்தியாய் இருக்க விரும்பவில்லை; நான் இந்த சபை மட்டும் என்று கூறவில்லை; ஒவ்வாரு விசுவாசியும் என்றுதான் குறிப்பிடுகிறேன்.

243. ஆபிரகாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரனை எதிர்நோக்கியிருந்தான். அது அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணப் பட்டிருந்தது. அது சரியா? சபையும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரனுக்காக காத்திருக்கிறது. மணவாட்டி (அதுசரியா?), மணவாட்டி அந்த

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரனுக்காக காத்திருக்கிறாள்.

244. சாராளுக்கும் ஆபிரகாமுக்கும் வாக்குத்தத்தம் பண்ணப் பட்ட குமாரன் வருவதற்கு முன்பு, அவர்களுடைய சரீரங்கள் மாற வேண்டும். அது சரியா?

245. குழந்தை பெறுவதற்கு சாராள் மிகவும் வயது சென்றிருந்தாள். அவளுடைய மார்பகத்தில் பால் சுரப்பிகள் இருக்க வில்லை; அவளுடைய மார்பகம் உலர்ந்து போயிருந்தது. அவளுடைய கர்ப்பப்பை கருத்தரிக்க முடியாத நிலையில் இருந்தது; அவள் மலடியாயிருந்தாள். அவளுக்கு குழந்தை பெற முடியாது; பிரசவ வேதனையைத் தாங்கிக் கொள்ள அவளுடைய இருதயம் மிகவும் வயது சென்று பலவீனமடைந்திருந்தது. எனவே என்ன நடந்தது? தேவன் அவளை மீண்டும் இளம் பெண்ணாக மாற்றினார். அவர் ஆபிரகாமுக்கும் அதையே செய்தார். ஏனெனில் அவனுடைய சரீரம் செத்துப் போயிருந்தது என்று அவர் கூறினார்.

பாருங்கள்? அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரனைப் பெற்றுக் கொள்வதற்கென, அவர் அவர்களுடைய சரீரத்தை மாற்ற வேண்டியதாயிருந்தது.

246. நாமும் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த சரீரங்களில், நமக்கென இன்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ள குமாரனைப் பெற முடியாது; இந்த சரீரங்கள் பாவமுள்ளவை.

247. முதலாம் மனச்சாட்சி, பார்த்தல், ருசித்தல், உணருதல், முகர்தல், கேட்டல் என்னும் புலன்களைக் கொண்ட இந்த சரீரத்தை கட்டுப்படுத்துகிறது, அது நம்மெல்லாரையும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. நாம் அறிவைப் பயன்படுத்தி யோசிக்கிறோம், மற்றெல்லாவற்றையும் செய்கிறோம். ஆனால் மறுபடியும் பிறந்ததனால் உண்டான அந்த புது சரீரமோ (இந்த முதலாம் மனச்சாட்சி அல்ல, அது கடந்து போகும்)..... அது ஜீவிக்கின்ற, உள்ளில் உள்ள ஒன்று. இதைப் புரிந்து கொண்ட ஒவ்வொருவரும் “ஆமென்"

என்று சொல்லுங்கள் (சபையோர் “ஆமென்” என்கின்றனர் - ஆசி).

248. அது இந்த வெளிப்புறத்தில் உள்ள பார்த்தல், ருசித்தல், உணருதல், முகர்தல், கேட்டல் அல்ல. அதுவல்ல. அது மரணத்துக்குக் கீழ்ப்பட்டுள்ளது. அது மரித்து விடும். ஆனால் உங்களுக்குள் இருக்கும் அந்த பாகம், உள்ளே உள்ளது, அந்த நபர் மரிக்கவே முடியாது. பாருங்கள்? அந்த நபரிலிருந்துதான், இந்த புதிய பிறப்பின் மூலமாக, புது ஜீவன் தொடங்குகிறது. அது உங்கள் சாயலிலே வேறொரு நபரை, அந்த ஜீவனைச் சுற்றிலும் உண்டாக்குகிறது. உங்களுக்குப் புரிகிறதா?

249. எனவே அது இங்கு மறைவாக உள்ளது. அது என்ன? உலக தோற்றத்துக்கு முன்பு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வார்த்தை . இது 'நெகடிவ்'வையே பிரதிபலிக்கிறது; - ஆனால் அதுவோ 'பாஸிடிவ்வை, வார்த்தையை, பிரதிபலிக்கும். பாருங்கள்? அதே காரியம் தான் - மணவாட்டி மறுரூபப்படுதலும் அதே

காரியமாகத் தான் இருக்கும். உங்களுக்குள் இருக்கும் அந்த வார்த்தையைச் சுற்றிலும் ஒரு சரீரம் உருவாகும், சாராளுக்கு நேர்ந்தது போல்.

250. அதற்கு முன்பு ... அவள் பெற்றிருந்த அந்த பழைய சரீரம், அந்த முதல் சரீரம், ஒரு குமாரனைப் பெறுவதற்காக மாற வேண்டியதாயிருந்தது உங்களுக்கு விளங்குகின்றதா? அந்த சரீரத்தினால் அதை செய்ய முடியவில்லை. அது போன்று நம்முடைய இந்த சரீரமும் அதை செய்ய முடியாது. குமாரனைப் பெற்றுக் கொள்ள இதுவும் அதே விதமாக மாற வேண்டும்.

**363. அது எப்படி எங்கே நடக்கும்? மணவாட்டி எந்த இடத்துக்குச் செல்கிறாள்?**

251. அது மகிமைக்கு, பரலோகத்துக்கு, கலியாண விருந்துக்கு செல்கிறது. ஈசாக்கும் ரெபேக்காளும் அதற்கு முன்னடையாளமாயுள்ளனர், ஈசாக்கை சந்திக்க ரெபேக்காள் புறப்பட்டுச் சென்ற போது. ஆபிரகாமிடமிருந்து புறப்பட்டுச்

சென்ற செய்திக்கு எலியேசர் எடுத்துக்காட்டாய் இருக்கிறான் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். ஈசாக்குக்கு மணவாட்டியை கண்டு பிடிக்க எலியேசர் புறப்பட்டுச் சென்றான். அவன் குளிர்ச்சியான சாயங்கால வேளையிலே அழகான ரெபேக்காளைக் கண்டான் - தண்ணீர் குடம் சுமந்து கொண்டு வருகின்ற கறுப்பு நிறத் தோலைக் கொண்ட பெண்ணை எலியேசர், "தேவனாகிய கர்த்தாவே, என் பிரயாணத்தை வாய்க்கச் செய்து என் ஆண்டவன் ஆபிரகாமுக்கு வெற்றியைத் தருவீராக" என்று ஜெபம் பண்ணினான்.

252. ஆபிரகாம் “நீ பெலிஸ்தியரின் மத்தியில் பெண் கொள்ளாமல் என் ஜனத்தாரிடம் போ" என்றான் - கிறிஸ்துவின் மணவாட்டிக்கும் கிறிஸ்துவுக்கும் இரத்த சம்பந்தமான உறவு என்பதை இது காண்பிப்பதாய் உள்ளது, ஏனெனில் ஈசாக்கும் ரெபேக்காளும் இரத்த சம்பந்தமான உறவினர்.

253. எனவே அவன் புறப்பட்டுச் சென்றான், அப்பொழுது இந்த அழகான ரெபேக்காள், வெளியே வந்து தண்ணீர் மொண்டாள். அவன், "அவள் 'ஒட்டகங்களுக்கும் குடிக்கக் கொடுப்பேன் என்று சொன்னால்' என்று ஜெபித்தான். அதன் பிறகு, நீங்கள் கவனிப்பீர்களானால், ரெபேக்காளுக்கு... முடிவான தீர்மானம் ரெபேக்காள் தான் செய்ய வேண்டும். எலியேசர் அவள் தகப்பனிடம் பெண் கேட்டான்; அவன் தாயிடமும் பெண் கேட்டான். அவர்கள் இருவருமே இணங்கவில்லை. அவள் சிறிது காலம் தங்கியிருக்க வேண்டு மென்று அவர்கள் விரும்பினர். அவன், "என் பணியில் என்னைத் தடை செய்யாதீர்கள்" என்றான்.

254. அப்பொழுது ரெபேக்காள் தான், தீர்மானத்தை தெரிவிக்க வேண்டும். அவன், "அவள் தான் பெண்; அவளே சொல்லட்டும்" என்றான்.

255. அவளைக் கேட்டவுடனே, வேகமாக அவள் மனதில் தீர்மானித்தாள்.

அவள், "நான் போகிறேன்" என்றாள். அவள் ஒட்டகத்தின் மேலேறி ஈசாக்கைச் சந்திக்க புறப்பட்டுச் சென்றாள்..... பாருங்கள், அவள் தண்ணீர் வார்த்த அதே ஒட்டகம் அவளை தன் மணவாளனிடம் கொண்டு சென்று, அவளுடைய வெற்றி அனைத்துக்கும் காரணமாயிருந்தது. அவ்வாறே நாம் தண்ணீர் வார்த்து துதியை ஏறெடுக்கும் (ஆமென்! பாருங்கள்?) அதே ஒட்டகம், அதே வல்லமை தான் (வேதத்தில் மிருகம் வல்லமைக்கு எடுத்துக்காட்டாய் உள்ளது), தண்ணீர் ஜீவனைக் குறிக்கிறது. துதி வார்த்தைக்கு ஏறெடுக்கப்படுகிறது - நாம் மணவாளனைச் சந்திக்க நம்மை மகிமையின் தேசத்துக்கு கொண்டு செல்கிறது. ஆம். ஐயா! ஆமென்!

அந்த மகிழச்சியான ஆயிரம் வருட அரசாட்சி நாள் வரக் காத்திருக்கிறோம். அப்பொழுது ஆசிர்வதிக்கப்பட்ட நமது கர்த்தர் வந்து, காத்திருக்கும் தம் மணவாட்டியை எடுத்துச் செல்வார்

256. இதை ஞாபகம் கொள்ளுங்கள், ஈசாக்கு தன் கூடாரத்தை விட்டுப் புறப்பட்டு

வந்து பிற்பகலில் வயலில் தியானித்துக் கொண்டிருந்தான். (ஆமென்!) ரெபேக்காள் வருவதை அவன் கண்ட போது .... அவள் அவனை கண்டதில்லை, அவனும் அவளைக் கண்டதில்லை, அது முதற்பார்வையிலே அன்பு. அவள் அவன் மேல் அன்பு கொண்டாள். அவனும் அவள் மேல் அன்பு கொண்டான், அவள் திரையிட்டு முகத்தை மறைத்திருந்தாள். ஆமென்! ஓ, என்னே!

257. கவனியுங்கள். அவள் அவனைக் கண்டபோது, அவள் இருதயம் மகிழ்ச்சியினால் பொங்கினது. அவள் யாரை விவாகம் செய்து கொள்ளப் போகிறாள் என்று அறிந்திருக்கவேயில்லை, ஆனால் விசுவாசத்தில் புறப்பட்டுச் சென்றாள். ஆமென்! அவன் அவளை வீட்டுக்கு அழைத்துச் சென்று, விவாகம் செய்து கொண்டு, தன் தகப்பனுக்கிருந்த சர்வத்துக்கும் சுதந்தரவாளியானான். ஆமென்! ஓ, பரிபூரணமாயுள்ளது, மிகவும் பரிபூரணமாயுள்ளது. சரி.

உயிரோடிருக்கின்ற மணவாட்டியின் சிறு கூட்டம், முதலாவது மணவாட்டி செய்தது போல, கர்த்தராகிய இயேசு மேகங்களின் மேல் வருவதற்கு முன்பு, எப்பொழுதாகிலும் எங்காகிலும் ஒன்று கூடி எல்லாவற்றையும் பொதுவாக அனுபவிப்பார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## செய்தி: 64-08-30E கேள்விகளும் பதில்களும் COD #23

396. உயிரோடிருக்கின்ற மணவாட்டியின் சிறு கூட்டம், முதலாவது மணவாட்டி செய்தது போல, கர்த்தராகிய இயேசு மேகங்களின் மேல் வருவதற்கு முன்பு, எப்பொழுதாகிலும் எங்காகிலும் ஒன்று கூடி எல்லாவற்றையும் பொதுவாக அனுபவிப்பார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

79. இப்பொழுது, நான் நம்புகிறேனா என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். வேதவாக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு என்னால் நிரூபிக்க முடியாது. ஒருக்கால் அத்தகைய நேரம் ஒன்று வரக்கூடும், எனக்குத் தெரியாது. அங்கு ஒருக்கால்... பாருங்கள்? அவ்விதம் நிகழுமானால், அவருடைய வருகை மிகவும் சமீபமாயுள்ளது என்பதை அது காட்டிக்கொடுத்து விடும். ஆனால் அவரோ,

"அவர் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வருவார்" என்று கூறியுள்ளார், பாருங்கள்? அவர் யாரிடம் வருகிறாரென்றால். நான் படித்த ரோமியோ ஜூலியட்டின் கதையைப் போல. அவர் இரவில் வந்து தன் மணவாட்டியை கொண்டு போய் விடுகிறார். அவள் ஒரு நொடிப்பொழுதில், ஒரு இமைப்பொழுதில் எடுத்துக் கொள்ளப்படுகிறாள். பாருங்கள்?

80. அவர்கள் ஒன்று கூடுவார்களா என்பது சந்தேகம் தான். ஏனெனில் வேதம், “இரண்டு பேர் படுக்கையில் இருப்பார்கள்; ஒருவனை எடுத்துக் கொள்வேன், மற்றவனைக் கைவிடுவேன்; இரண்டு பேர் வயலில் இருப்பார்கள்; ஒருவனை எடுத்துக் கொள்வேன், மற்றவனைக் கைவிடுவேன்” என்றுரைக்கிறது. பாருங்கள். எனவே அவர்கள் ஒருக்கால்... உலகிலுள்ள மணவாட்டி ஓரிடத்தில் ஒன்றுகூடி எல்லாவற்றையும் பொதுவாக வைத்து அனுபவிக்க மாட்டாள். ஆனால் அவர்களில்

சிறு குழுக்கள் உலகம் முழுவதிலும் சிதறிக் கிடக்கும்.

81. நான் நம்புகிறேன், கர்த்தர் என்னை அனுமதிப்பாரானால்; இது அதன் ஒரு சிறு குழு. ஒருக்கால் ஆசியாவில் ஒரு சிறு குழு இருக்கக்கூடும். அன்றொரு நாள் நான் மணவாட்டியின் தரிசனத்தைக் கண்டபோது, அவள் சர்வதேசங்களிலிருந்தும் வந்தவளாயிருந்தாள். எனவே மணவாட்டி ஓரிடத்தில் கூடுவதில்லை, அவள் உலகம் பூராவிலுமிருந்து வந்தவளாயிருப்பாள். அது வார்த்தையை முழுவதுமாக உறுதிப்படுத்துகிறது, வார்த்தை ஒரு போதும் தவறாயிருந்ததில்லை. இதுவரைக்கும் தரிசனமும் தவறாயிருந்ததில்லை, ஏனெனில் அது வார்த்தையின் படி உள்ளது.

# இந்த நேரத்தில் உண்மையான பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற எவராவது மணவாட்டியின் எடுத்துக் கொள்ளப்படுதலில் போகாமலிருக்க வகையுண்டா?



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## செய்தி: 64-08-30E கேள்விகளும் பதில்களும் COD #23

397. இந்த நேரத்தில் உண்மையான பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற எவராவது மணவாட்டியின் எடுத்துக் கொள்ளப்படுதலில் போகாமலிருக்க வகையுண்டா? நீங்கள் விளக்கம் தருவீர்களா? பாரத்தை இலகுவாக்க நாங்கள் எந்த வகையில் உங்களுக்கு உதவி செய்யக் கூடும் என்று எங்களுக்குச் சொல்லுங்கள்.

82. முடியாது. இப்பொழுது உங்களால் ஒன்றும் செய்ய முடியாது.

83. ஆம், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற உண்மையான விசுவாசிகள் மணவாட்டியில் இருப்பார்கள். அவர்கள் தெரிந்து கொள்ளப்பட்டு வெளியே அழைக்கப்பட்டவர்கள். புத்தியில்லாத கன்னிகையிடம் எண்ணெய் இல்லை.

எண்ணெய் வைத்திருந்தவர்கள் உள்ளே சென்றனர். ஆனால் அந்த...

84. “பாரத்தை இலகுவாக்க நாங்கள் என்ன செய்யக் கூடும்? ஆம், சகோதரனே, சகோதரியே. இதை எழுதினது யாராயிருப்பினும், எனக்காக ஜெபியுங்கள். நீங்கள் செய்யக் கூடிய மிகச் சிறப்பான காரியம் அதுவே. உங்களுக்கு நன்றி. எனக்குப் பணம் தேவையில்லை. நான்... என் தேவைகளை கவனித்துக் கொள்ள போதிய பணம் வருகிறது. அதற்காக நான் கர்த்தருக்கு நன்றியுள்ளவனாயிருக்கிறேன். எனக்கு உடைகள் தேவையில்லை. நான் உடுக்கும். உடைகளை அநேக முறை ஜனங்கள் எனக்கு வாங்கித்தந்து விடுகின்றனர். அவர்கள்... என். குடும்பத்தை போஷிக்க எனக்குப் போதிய பணம் கிடைக்கிறது; அவ்வளவு தான் நமக்குத் தேவை. என்ன தோன்றுகிறதென்றால்... எனக்காக நீங்கள் ஜெபிக்கலாம், ஏனெனில் எனக்கு ஆவிக்குரிய உதவி நிச்சயம் தேவை.

# மோசே இஸ்ரவேல் புத்திரரை நடத்திக் கொண்டு போன போது இருந்தது போல், இப்பொழுதும் மணவாட்டி, ஒன்று கூடி வாழ ஒரு இடம் இருக்கிறதா, அல்லது இனிமேல் இருக்குமா?



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: 64-08-30E கேள்விகளும் பதில்களும் COD #23

407. மோசே இஸ்ரவேல் புத்திரரை நடத்திக் கொண்டு போன போது இருந்தது போல், இப்பொழுதும் மணவாட்டி, ஒன்று கூடி வாழ ஒரு இடம் இருக்கிறதா, அல்லது இனிமேல் இருக்குமா?

107. இந்த கேள்விக்கு நான் உங்களுக்கு விடையளிக்கப் போகிறேன்; இப்பொழுது தான் எனக்கு அது வெளிப்படுத்தப் பட்டது. நான் உங்களுக்கு உண்மையைக் கூறப் போகிறேன். ஆம், ஐயா! மணவாட்டி அனைவரும் ஒன்று கூடுவதற்கு ஒரு இடம் உண்டு. அது எங்குள்ளது என்று அறிய விரும்புகிறீர்களா? கிறிஸ்துவில். மிகவும் சரி. அங்கு ஒன்று கூடுங்கள்; நாமெல்லாரும் ஒன்று கூடினவர்களாய் இருக்கிறோம்.

# கடைசி வார்த்தைக்காக தேவனுடைய ஜனங்கள் எப்பொழுது எங்கே கூடுவார்கள்?



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: 64-08-30E கேள்விகளும் பதில்களும் COD #23

430. கடைசி வார்த்தைக்காக தேவனுடைய ஜனங்கள் எப்பொழுது எங்கே கூடுவார்கள்?

190. கிறிஸ்துவில்.. ஆம்! கடைசி நாளில், அவர்கள் கிறிஸ்துவில் கூடுவார்கள். அதை மறந்து விடாதீர்கள். நமக்கு கூடுவதற்கு ஓரிடம் உண்டு; அதை நாம் பெற்றிருக்கிறோம் என்பது உண்மையே,

# சகோ. பிரான்ஹாமே, பூமி வெடித்து எரியும் போது, மணவாட்டி எங்கிருப்பாள்?



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: 64-08-23E *கேள்விகளும் பதில்களும்* COD #21

284. கேள்வி: சகோ. பிரான்ஹாமே, பூமி வெடித்து எரியும் போது, மணவாட்டி எங்கிருப்பாள்? வாதைகள் விழுந்த போது, இஸ்ரவேல் புத்திரர் இருந்த கோசேன் நாட்டைப் போல் அது ஒரு இடமாக இருக்குமா? அது நடக்கும் போது மணவாட்டி பூமியில் இருப்பாளா? அப்படியானால், அவள் எங்கிருப்பாள்?. எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழும் நேரத்தில் மணவாட்டி அனைவரும் ஒரே இடத்தில் இருப்பார்களா?

77. மணவாட்டி, பூமி வெடிக்கும் போது... எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழும் நேரம், மரித்தோர் நித்திரையினின்று எழும்பி, உயிரோடிருப்பவர்களுடன் ஒன்று சேர்ந்து, எடுத்துக் கொள்ளப்படுதலில் அவர்களைக் கொண்டு செல்லும். இப்பொழுது,

மணவாட்டி... இப்பொழுது, பாருங்கள், எடுத்துக் கொள்ளப்படுதல் என்பது ஆயிரம் வருட அரசாட்சிக்கு முன்பு நடைபெற வேண்டிய சம்பவங்களில் ஒன்றாகும். பூமி எரியும் சம்பவம், ஆயிரம் வருட அரசாட்சிக்கும் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்கும் இடையே நடக்கும் ஒன்று. பாருங்கள்? பரிசுத்தவான்கள் பூமியின் பரப்பில் பாளயமிறங்கியிருக்கும் போது, சாத்தான் அந்த அன்பார்ந்த நகரத்தை சுற்றி வளைவான். தேவன் அப்பொழுது வானத்திலிருந்து அக்கினியையும் கந்தகத்தையும் பொழிந்து அவர்களை அழித்துப் போடுவார். சரி, வேதம் அவ்வாறு உரைக்கிறது.

# நாங்கள் எங்கே ஒன்று கூட வேண்டும்? நாங்கள் எக்காளங்களின் போது ஒன்றுகூட வேண்டுமென்று நீர் சொன்னீர்.



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: 64-08-23E கேள்விகளும் பதில்களும் COD #21

320. நாங்கள் எங்கே ஒன்று கூட வேண்டும்? நாங்கள் எக்காளங்களின் போது ஒன்றுகூட வேண்டுமென்று நீர் சொன்னீர்.

219. கூட்டாளியே, சகோதரியே, நீங்கள் யாராயிருந்தாலும், அதில் நீங்கள் தவறு செய்கிறீர்கள். எக்காளங்களின் போது நீங்கள் ஒன்று கூடுங்கள் என்று நான் சொல்லவேயில்லை. இஸ்ரவேலர் எக்காளங்களின் போது ஒன்று கூடுவார்கள் என்று தான் சொன்னேன், புறஜாதி மணவாட்டியல்ல. இல்லை, இல்லை, எக்காளங்கள், எழு எக்காளங்களின் முழக்கம் இஸ்ரவேலரை உலகின் எல்லா பாகங்களிலிருந்தும் ஒன்று கூட்டுவதற்கே (எத்தனை பேருக்கு அது தெரியும்?). ஆம், புறஜாதி மணவாட்டி அல்ல... இல்லை, இல்லை! உ, ஊ, இல்லை. எனவே அது

புறஜாதி மணவாட்டியல்ல. நாம் எக்காளங்களின் போது ஒன்று கூடுவதில்லை, மணவாட்டி ஒன்று கூடுவதில்லை. எக்காளங்கள் பெந்தெகொஸ்தே பண்டிகைக்குப் பிறகு வருகிறது. பாருங்கள் எடுத்துக் கொள்ளப்படுதல் வருகிறது... அது... இந்த கேள்வி அதை குறித்ததல்ல.

# கிறிஸ்துவின் மணவாட்டியும், கிறிஸ்துவின் சரீரமும் ஒன்று தானா?

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## செய்தி: 63-03-24 M முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும் COD #18

193. கிறிஸ்துவின் மணவாட்டியும், கிறிஸ்துவின் சரீரமும் ஒன்று தானா?

231. ஆமாம், ஐயா! பாருங்கள்? இப்பொழுது இங்கே கவனியுங்கள், நான் இதை ஆரம்பிக்க விரும்பவில்லை. ஏனென்றால் அதன் மீது நான் ஒரு பிரசங்கமே செய்யக்கூடும். ஆனால் அதைச் செய்யமாட்டேன், ஆனால் உங்களுக்கு காண்பிக்க விரும்புகிறேன். தேவன், ஆதாமுக்கு அவனுடைய மணவாட்டியை அவனுடைய விலாவிலிருந்து கொடுத்த போது, அவன், "இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்'' என்றான். அது சரிதானே?

232. தேவன், கிறிஸ்துவுக்கு அவருடைய மணவாட்டியை கொடுத்த

போது, ஆவியானவர் மணவாட்டியாகிய மாம்சத்தை தந்தார். அவருடைய இருதயத்திற்கு கீழாக அவர் குத்தப்பட்டார், தண்ணீரும், இரத்தமும், ஆவியும் புறப்பட்டு வந்தன; அதுதான் "அவருடைய மாம்சத்தில் மாம்சமும், அவருடைய எலும்பில் எலும்புமாக" உருவாக்கப்பட்டது. மணவாட்டிதாமே, கிறிஸ்துவின் எலும்பும் மாம்சமாகவும் இருக்கிறோம் நிச்சயமாக. அவர்கள் அவ்விதமாகத்தான் இருக்கிறார்கள். அதுதான் அவரது மணவாட்டி.

கடந்த இரவு நீங்கள் ''ஒவ்வொரு கோத்திரத்திலும்,
தேசத்திலுமிருந்து வந்ததும் ஒருவனும்
எண்ணக்கூடாதது மான திரளான கூட்டமான
ஜனங்கள்,'' என்று வெளிப் படுத்தின விசேஷம்
7வது அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளதைக் குறித்து
பேசினீர்கள். ''அவர்கள் தான் கிறிஸ்துவின்
மணவாட்டி' என்று கூறியதை, நான் நீங்கள்
கூறியதை சரியாக புரிந்து கொண்டுள்ளேனா?



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## செய்தி: 54-05-15 கேள்விகளும் பதில்களும் COD #4

32. கடந்த இரவு நீங்கள் ''ஒவ்வொரு கோத்திரத்திலும், தேசத்திலுமிருந்து வந்ததும் ஒருவனும் எண்ணக்கூடாதது மான திரளான கூட்டமான ஜனங்கள்,'' என்று வெளிப் படுத்தின விசேஷம் 7வது அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளதைக் குறித்து பேசினீர்கள். ''அவர்கள் தான் கிறிஸ்துவின் மணவாட்டி' என்று கூறியதை, நான் நீங்கள் கூறியதை சரியாக புரிந்து கொண்டுள்ளேனா?

ஆம், நீங்கள் என்னை புரிந்து கொண்டிருக்கிறீர்கள்.

அவர்கள்தான் மணவாட்டி.

153. இப்பொழுது நீங்கள் கவனிப்பீர்களானால், சரியாக வெளிப்படுத்தல் 7ல், அவன் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரைக் கண்டான். இப்பொழுது என் சகோதரனே, இதன் பேரில்

உங்களை குற்றப்படுத்தவில்லை, ஆனால் அந்த நூற்று ... வழக்கமாக ஒரு யெகோவா சாட்சிகள் குழுவைச் சேர்ந்த ஒருவர் தான் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் தான் மணவாட்டியாக இருக்கும் என்று விசுவாசிப்பார். அது பிழையான ஒன்றாகும்! அவர்கள் ஒவ்வொருவரையும் யோவான் அறிந்திருந்து அவர்களை பெயர் சொல்லி அழைத்தான். அவர்கள் ஒவ்வொருவரும் யூதர்களாக இருந்தனர். அவர் ''காத்திலிருந்து பன்னீராயிரம், செபுலோனிலிருந்து பன்னீராயிரம், பென்யமீனிலிருந்து பன்னீராயிரம், யூதாவிலிருந்து பன்னீராயிரம்,'' என்றான், அது சரியா? இஸ்ரவேலில் பன்னிரண்டு கோத்திரங்கள் இருக்கின்றது, பன்னிரண்டும் பன்னிரண்டும் பெருக்கினால் ... இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ஆகும். அது சரியா? அவர் "எல்லா இஸ்ரவேல் புத்திரரும்'' என்றார். யோவான் அவர்களை அடையாளம் கண்டு கொண்டான்.

154. பிறகு அவன் இந்த பக்கமாக திரும்பிப் பார்த்து, "சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும் ஒருவனும் எண்ணக் கூடாததுமான திரளான கூட்ட மாகிய ஜனங்கள் வெள்ளை அங்கிகளைத் தரித்து தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து அசைத்துக் கொண்டு, சத்தமிட்டுக் கொண்டு, ஓசன்கு. .. ராஜாவுக்கு என்று பாடிக் கொண்டு இங்கே ஏன் நின்று கொண்டிருக்கிறார்கள்" என்றான். அவன் " யார் இவர்கள்?'' என்று கேட்டான்.

155. அவன் ''மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்து தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்தவர்கள் இவர்கள்தான். இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து இரவும் பகலும் ஆட்டுக்குட்டியானவரை அவருடைய ஆலயத்தில் சேவிப்பார்கள், இவர்கள் அவரை விட்டு செல்ல மாட்டார்கள்'' என்றான். அது தான் மணவாட்டி, பாருங்கள் மனைவி, புறஜாதி மணவாட்டி.

156. நினைவில் கொள்ளுங்கள், மணவாட்டியானவள் புறஜாதியாக இருக்கிறாள். அவர் “அவர் வந்து, புறஜாதிகளிலிருந்து தமது (எதற்காக?) நாமத்திற்காக ஒரு ஜனத்தை தெரிந்துகொள்ளுவார்,” என்றார்.

157. இப்பொழுது, உலகத்திலே அநேக வாலிபப் பெண்கள் உள்ளனர். ஆனால் நான் ஒரு பெண்ணை எடுத்திருக்கிறேன், அது தான் மேடா பிராய், அவள் தான் இப்பொழுது திருமதி. வில்லியம் பிரன்ஹாம். அவள் ...... அவள் இன்னுமாக பிராய் அல்ல. அவள் இப்பொழுது பிரன்ஹாமாக இருக்கிறாள், பார்த்தீர்களா?

158. ஆகவே அவ்வாறே தான், நீங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு ஒரு மணவாட்டியாக, மணவாட்டியின் அங்கத்தினர்களாக ஆகிவிடுகின்றீர்கள்.

# எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன்பு கிறிஸ்துவின் மணவாட்டிக்கு ஊழியம் இருக்குமா?



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## செய்தி: 63-03-24 M முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும் COD #18

194. எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன்பு கிறிஸ்துவின் மணவாட்டிக்கு ஊழியம் இருக்குமா?

233. நிச்சயமாக, இப்பொழுது நேரடியாக அதுதான் நடந்துக் கொண்டிருக்கிறது. கிறிஸ்துவின் மணவாட்டி, நிச்சயமாக! அதுதான் ஏற்ற வேளையின் செய்தி-கிறிஸ்துவின் மணவாட்டி. நிச்சயமாக, அவள், அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள், சுவிசேஷகர்கள், மற்றும் மேய்ப்பர்களை உடையவளாய் இருக்கிறாள். அது சரியா? (சபையார் “ஆமென்'' என்று கூறுகின்றனர் -ஆசி) அதுதான் கிறிஸ்துவின் மணவாட்டி. நிச்சயமாக, அவளுக்கு ஒரு ஊழியம் உண்டு. ஒரு மகத்தான ஊழியம்- இந்த காலத்திற்குரிய ஊழியம், அது மிகவும் எளிமையானதாக இருக்கும்.

234. இப்பொழுது நினைவுகூருங்கள். கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று முதல் கூட்டத்தில் நான்... இருந்தீர்கள்? நான் எதைக் குறித்து பிரசங்கித்தேன் என்று நினைவிருக்கிறதா? எளிமை. ஓ! அதை மறந்து விட வேண்டாம். அதைக் குறித்து மறுபடியும் எச்சரிக்க ஒரு நிமிஷம் நிறுத்தப்போகிறேன். ஏதாகிலும் ஒரு மகத்தான காரியம் நடக்கப்போவதாக தேவன் முன்னுரைக்கும்போது, மக்கள் தங்கள் ஞானத்தினால், என்ன நடக்கிறதோ அதை இழந்து போகும்வரை, வெகு தூரத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தேவன் ஒரு காரியத்தை மகத்தானது என்று கூறும்போது, உலகம் அதைக் குறித்து நகைத்து, "ஒரு கூட்டம் அறிவில்லாதவர்கள்" என்றுரைக்கிறது. அது சரி.

மகத்தான உலகமும், மிக மகத்தான சபையும், "சிறுவனே, அது மகிமையானது!" என்று சொல்லும்போது, தேவன் அவர்களைப் பார்த்து, "ஒரு கூட்டம் அறிவில்லாதவர்கள்" என்று கூறுகிறார். ஆகவே, நீங்கள்

விழிப்பாய் இருக்கவேண்டும்.... அது ஒருவேளை அவ்விதமாகத்தான் இருக்கலாம் என்று நான் நினைக்கவில்லை. சரியாக அதே வழிதான், ஆனால் அந்த வழியில்தான் அது அமைந்திருக்கிறது.

235. கவனியுங்கள்! இங்கே மகத்தான, பரிசுத்த வைதீக சபை ஒன்று இருந்தது, ''நமக்கு வார்த்தை தெரியும்; நமக்கு பள்ளிகள் உண்டு;

நமக்கு வேதப்பள்ளிகள் உண்டு. நம்மிடம் மெருகேற்றப்பெற்ற மனிதர்கள் உண்டு. நூற்றுக்கணக்கான வருடங்களாக யேகோவாவுக்கு உத்தமமாய் இருந்து வந்திருக்கிறோம். நாம் தான் 'சபை'; நாம் தான் ஆலோசனை சங்கம், பரிசேயர்களும், சதுசேயர்களும் மற்றும் எல்லா ஸ்தாபனங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கும் சபைகளின் ஐக்கியம் நமக்குண்டு. நாம் பெற்றுக்கொண்டிருப்பதுபோல. சபையின் ஆலோசனை சங்கமாக நாமெல்லாரும் ஒன்றாக இருக்கிறோம். இங்கே நாம்தான்

பெரிய மனிதர்கள். நாம் அந்த வேதவாக்கியங்களை அறிந்துள்ளோம். நதிக்கரையிலே ஆட்டுத்தோல் உடையணிந்து தாடியுடன் நின்றுக் கொண்டிருக்கும் அந்த எளிமையில் உள்ள அறிவில்லாதவனைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்'' என்று கூறினதைக் கவனியுங்கள். நிச்சயமாக அவர்கள் அதற்கு செவிசாய்க்கமாட்டார்கள்.

236. ஆனால், வேதாகமம் மல்கியா 4ல்... அல்லது 3-ம் அதிகாரத்தில், "இதோ, நான் என் செய்தியாளனை அனுப்புகிறேன். அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம் பண்ணுவான்'' என்று கூறுகிறது. இதற்கு ஏழுநூற்று பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு யோவான்... ஓ, அந்த மகத்தான தீர்க்கதரிசியாகிய ஏசாயா அங்கு நின்றுக்கொண்டு, "கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவாந்தர வெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வைப் பண்ணுங்கள் என்றும். வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று" என்று கூறினான். அது சரி, "ஓ,

எல்லா உயர்ந்த இடங்களெல்லாம் தாழ்த்தப்படும். இதைக்குறித்து அநேக மக்கள் பேசினார்கள்.

237. ஓ, "இந்த மனிதன் வரும்போது தன்னுடைய விரலை சுட்டிக்காட்டி கட்டளையிடும்போது, மலைகள் அகன்று போய்விடும், ஓ, பள்ளமான இடங்களெல்லாம் உயர்த்தப்படும். கரடுமுரடான இடங்களெல்லாம் சமமாக்கப்படும். சகோதரனே, இங்கிருக்கும் வயல்களிலெங்கும் தானியத்தை பயிர் செய்யலாம். ஓ, இந்த மனிதன் வரும்போது நாம் மகத்தான காரியங்களை செய்யப்போகிறோம்" என்று அநேகர் கூறினார்கள். பாருங்கள்?

238. தேவன் ஒரு இயந்திரக்கைப்பிடியை சுழற்றி, ஒரு தாழ்வாரத்தை கீழே இறக்கி அதிலிருக்கும் மனைதனைப் பார்த்து, "என்னுடைய மேசியாவின் மகத்தான முன் தூதனே, வெளியே வாரும்" என்று கூப்பிடுவா ரென்றும், அதற்குப் பிறகு அவன்

போனபிறகு அவர்கள் அதை மறுபடியும் இழுத்து, அவனுடைய ஊழியம் முடிந்தபிறகு மறுபடியும் இயந்திர கைப்பிடியை சுழற்றி அதை கீழே இறக்கி வேதப்பள்ளியின் பக்கத்தில் வைத்துவிட்டு, "நல்லது, என்னுடைய நேசக்குமாரனே, வெளியே வந்து அவர்களுக்கு அறிவியும்'' என்று கூறுவார் என்றும் அவர்கள் எதிர்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பாருங்கள்? ஓ, என்னே!

239. அவன் வந்தபோது என்னென்ன நடந்தது என்பதைக் கவனித்தீர்களா? “அவர்கள், பள்ளிக்கூடங்களில் படிக்காத ஒருவன் இங்கிருக்கிறான்-அவனிடத்தில் ஐக்கியத்தின் அட்டைகூட இல்லை-ஓ, அவனிடத்தில் எந்தவிதமான அத்தாட்சிக் கடிதமும் இல்லை. இல்லை. அவனுடைய வாழ்க்கையிலேயே ஒரு நாளாகிலும் பள்ளிக்கூடத்திற்கு சென்றதாக கூறுவதற்கும் ஒருவருமில்லை. அவனுடைய பேச்சைப் பார்த்தால் கூட அவன் பள்ளிக் கூடத்திற்கு போகாதது போலிருக்கிறது. மத சம்பந்தமான வார்த்தைகளைக்கூட அவன் பேசவில்லை.

அவன், விரியன் பாம்பு, கோடாரி, வனாந்தரம், மரம் போன்ற வார்த்தைகளைத்தான் பேசினான். அந்த நாளிலோ, அல்லது இந்த நாளிலோ, அல்லது எந்த நாளிலோ இருந்த மதசங்கத்தின் அமைப்புகளுக்குரிய வார்த்தைகளையே அவன் பேசவில்லை ."

240. அவன் ஒரு அநாகரிக மனிதனாகக் காணப்பட்டான். எங்கோ இருந்த ஒரு புதரிலிருந்து வெளியே வந்தான். அவன் சவரம் செய்துக் கொள்ளாதவனும், தன் தலையின்மீது படியாமல் நின்றுக்கொண்டிருக்கும் மயிரை உடையவனாகவும் வந்தான். இரண்டு மாதத்திற்கொரு முறையோ, அல்லது மூன்று மாதத்திற்கொருமுறையோ மாத்திரம் குளித்தவனாக இருந்திருக்க வேண்டும் என நான் நினைக்கிறேன். சரி. இரவில் அவன் "பைஜாமா" போடாதவனாய் இருந்தான். அவன் எந்த விதமான காரிலும் செல்லாதவனாகவும் இருந்தான். அவன் தன் பற்களை 'பிரஷ்ஷினால் சுத்தம்

செய்யாதவனுமாயிருந்தான்- உண்மையில் இல்லை. ஓ, இவன் எப்படிப்பட்ட மனிதனாயிருந்தான்.

241. இதோ அவன் வனாந்தரத்தில் தடியை ஊன்றி நடந்து வந்து, ''கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள் என்றும், அவருக்கு பாதையைச் செவ்வைப்படுத்துங்கள் என்று வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனின் சத்தமாய் இருக்கிறேன்!'' என்று கூறினான்....

242. போதகர்களில் சிலர் அங்கு நின்று கொண்டு, "ஊ! உன்னிடத்தில் இருக்கிறதா... இந்த பெருங்கூட்டத்தில் நாங்கள் ஒத்துழைக்க மாட்டோம், நாங்கள் அதைச் செய்ய முடியாது. நல்லது, உன்னுடைய அடையாளச் சீட்டு எங்கே?'' என்று கேட்டார்கள். அவர்கள் கேட்டதை அவன் பொருட்படுத்தவில்லை. அவன் ஒரு செய்தியைக் கொண்டு வந்திருந்தான். அதையே அவன் பிரசங்கித்தான்.

243. அவர்கள், "ஆ, சற்று பொறுங்கள், நாங்கள் பேராயரை (Bishop) கொண்டு வருகிறோம். அவர் அதைக்குறித்து என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம். நாங்கள் அங்கே செல்லுகிறோம். அதுதான் சபையின் தலைமைஸ்தலம். இதைச் சபையின் தலைவர்தான் அங்கீகரிக்க வேண்டும். இவன் தேவனிடத்தில் இருந்து வந்திருப்பானானால் இவன் நம்முடைய பேராயரை அங்கீகரிப்பான்,'' என்று கூறினார்கள்.

244. அங்கு ஆசனங்களைப்போட்டு மரியாதைக்குரிய பெரியோர்களை உட்கார வைத்திருப்பார்கள்.

245. அவன், ''விரியன் பாம்புக்குட்டிகளே, புல்லின்கீழ் இருக்கும் சர்ப்பங்களே'' என்று கூறினான். தங்களுடைய காலர் பட்டையை உயர்த்தி போட்டுக் கொண்டிருக்கும் பரிசுத்த பிதாக்களையும் மற்றவர்களையும். ''வரும் கோபத்திற்கு தப்பித்துக் கொள்ள உங்களுக்கு வகை காட்டினவன் யார்? உங்களுடைய நேரம் சமீபமாய் இருக்கிறது. நீங்கள் இதை

சிந்திக்கவில்லையா?...'' நீங்கள், "அவன் இதை சேர்ந்தவன் அல்லது அதை சேர்ந்தவன்'' என்று கூறலாம். ''நான் உங்களுக்கு சொல்லுகிறேன்: நான் ஆராதிக்கும் தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராக இருக்கிறார்" என்றான். ஓ, என்னே!

246. இப்பொழுது, மதத்தலைவர்களைப்போல அவன் பேசாமல் அதற்கு விரோதமாகப் பேசினான். "கோடாரியானது மரத்தின் வேர் அருகே வைக்கப்பட்டிருக்கிறது! ஆகையால் நல்ல கனி கொடாத மரமெதுவோ அது வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படும்! ஓ, நான் உங்களுக்கு தண்ணீரினால் மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் கொடுக்கிறேன். ஆனால் எனக்குப் பின்னால் அவர் வருகிறார்; சந்திரன் இரத்தம் போலாகும் மற்றும்...'' ஓ! ''அவர் தம்முடைய களத்தை நன்றாய் விளக்கி, பதரை அவியாத அக்கினியில் சுட்டெரிப்பார்.

கோதுமையையோ களஞ்சியத்தில் சேர்ப்பார். அவர் களையையும், கோதுமையையும் தனியே பிரிப்பார்.'' ஓ! என்னே ஒரு செய்தி!

247. அவர்கள் “ஊ! இந்த மனிதனா! இவன் என்ன சொல்லுகிறான்?இது-இது-இது என்ன சமயம்? ஓ, படிப்பறியாதவன். நமக்கு அங்கு ஒரு மனிதன் இருக்கின்றார். சகோதரன் ஜோன்ஸ் இருக்கிறார். இந்த நாட்களில் யாராகிலும் எழுப்பப்பட வேண்டுமானால் அது இவராகத்தான் இருக்க முடியும். பேராயர் இன்னார் இன்னார்தான் இதைச் செய்ய முடியும். பரிசுத்த பிதாவாகிய இன்னார் இன்னார்தான் இதைச் செய்ய முடியும்'' என்று கூறினார்கள். ஓ, என்னே ! பாருங்கள்?

தேவன் எளிமையில் மறைந்திருந்து, எளிமையில் கிரியை செய்கிறார். புரிகின்றதா?

248. ஒருநாள் அவர் அங்கு நின்று கொண்டிருந்தார். அவன் “ஆமாம், அவர் உங்கள் மத்தியிலே நின்றுக்

கொண்டிருக்கிறார்'' என்றான். அவன்தான் அந்த முன்னோடி என்பதை அவன் நிச்சயமாக அறிந்திருந்தான். அவன், தான் யார் என்பதை அறிந்திருந்தான். ஆகவே தான் அவர்களை அவன் அவ்விதம் அசைத்தான். ''பயப்படாதிருங்கள், தொடர்ந்து நன்மையான காரியங்களைச் செய்து முன்னேறுங்கள். இராணுவ வீரர்களாகிய நீங்கள், உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படியுங்கள், தீமை ஏதாகிலும் செய்திருந்தால் நற்சீர் பொருந்துங்கள்...' என்றான்.

249. ''நாங்கள் என்ன செய்ய வேண்டும்? நாங்கள் இவ்விதமான காரியங்களை செய்வதை விட்டுவிடட்டுமா? நாங்கள் இதை நிறுத்தி விடட்டுமா?''

250 அவன், ''நீங்கள் இருக்கிறவண்ணமாகவே முன்னேறிச் செல்லுங்கள், முன்னேறுங்கள்; நீங்கள் உருளைக் கிழங்கை பயிர் செய்தால், தொடர்ந்து பயிர் செய்யுங்கள். இராணுவவீரர்களே, கொடுமை

செய்யாதீர்கள், நீங்கள் எவ்விதம் இருக்கிறீர்களோ அவ்விதமாகவே தொடர்ந்து செல்லுங்கள். உங்களுடைய எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்.''

''ரபீ, நாங்கள் என்ன செய்யவேண்டும்?''

251. ''நீங்கள் இருக்கிற வண்ணமாகவே முன்னேறி செல்லுங்கள், நீங்கள் அறியாத ஒருவர் உங்கள் மத்தியிலே இருக்கிறார்.'' அவன் தன்னுடைய செய்தியின் நேரத்தை அறிந்திருந்தான். அவன் அந்த நபரை அறிமுகப்படுத்த வேண்டும் என்பதை அறிந்திருந்தான். அவர் அங்கிருக்கிறார் என்பதை அவன் அறிந்திருந்தான். ''ஒருவர் உங்கள் மத்தியில் இருக்கிறார்; நீங்கள் அவரை அறியவில்லை. நடந்துக் கொண்டிருக்கும் காரியங்களை நீங்கள் அறிந்துக் கொள்ளாமல் இருக்கிறீர்கள்'' என்றான். ''ஏதோ ஒன்று நடக்கப் போகின்றது'' என்றான். "அவர் இங்கிருப்பார், நான் அவரை அறிந்துக் கொள்ளுவேன்.''

252. கடைசியாக ஒருநாள் அவன், "இதோ அவர் இங்கிருக்கிறார். இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி'' என்றான். ''என்னுடைய நேரம் இப்பொழுது வந்திருக்கிறது. நான் அவரை உங்களுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறேன். நான் இப்பொழுது சிறுக வேண்டும்; நான் இந்தக் காட்சியை விட்டுச் செல்ல வேண்டும். இங்கிருந்து அவர் தொடர்ந்துகொண்டு செல்லுவார்.''

"இப்பொழுது ஆயிர வருட அரசாட்சி தொடங்க வேண்டியதாய் இருக்கிறது, காலம் சமீபமாய் இருக்கிறது'' என்றான். அவர் வரும் போது...

253. "அவர் எல்லோரையும் அசைத்து, கோதுமையை பதரிலிருந்து பிரித்தெடுப்பார். அவர் பதரையோ அக்கினியில் சுட்டெரிப்பார். அவர் தம்முடைய களத்தை நன்றாக விளக்குவார். நூற்றுக் கூடை அவர் கையில் இருக்கிறது'' என்று யோவான்

கூறினான். ஆனால் அவர் யார்? - அந்தச் சிறிய.....

254. இப்பொழுது, அவர்கள் இவ்விதமாக திட்டம் தீட்டி வைத்திருந்தனர். "ஓ! மனிதனே! அவர் வரும்போது ஒருமைல் நீளத்திற்கும் மேலான ஈட்டியை அவர் பெற்றிருப்பார். அவர் பாலஸ்தீனாவில் நின்று கொண்டு, தம்முடைய வெண்மையான மேகங்களில் ஒன்றின்மீது நின்றுக் கொண்டு, இந்த எல்லா ரோமர்களையும் பொறுக்கியெடுத்து அவர்களை நரகத்தில் போட்டு விடுவார். - எல்லோரையும் அழிக்கும் வரை இவ்விதமாகச் செய்வார்.'' இவ்விதமாகத்தான் அவர்கள் எல்லோரும் மேசியாவின் வருகையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

அவ்விதமான வேளையில்தான், ஒரு சிறு ஆட்டுக்குட்டி, சாந்தமும், மனத்தாழ்மையுமாய் அந்தப் பக்கமும், இந்தப் பக்கமும் தள்ளிவிட்டுக் கொண்டு மெதுவாக நகர்ந்து வந்தது.255. அவர் அவ்வளவு எளிமையாக வந்திருந்ததால்

யோவானுக்கும் சந்தேகமுண்டாகி, ''நீங்கள் அவரிடத்தில் போய் வருகிறவர் நீர் தானா?'' என்று கேட்கும்படி அனுப்பினான். அவ்வளவாக எளிமையில் வந்திருந்ததால் அந்த தீர்க்கதரிசியும்'' வருகிறவர் நீர்தானா? அல்லது வேறொருவர் வரவேண்டுமா?'' என்று கேட்கும்படி ஆட்களை அனுப்பியிருந்தான்.

256. இப்பொழுது அவர் மத்தேயு 11ல் அந்தச் சீஷர்களுக்கு படிக்கும்படியாக ஒரு புஸ்தகத்தை அளிக்கவில்லை. யோவானின் சீஷர்கள் அவரிடத்தில் வந்து கேட்டபொழுது...

யோவான் சிறையில் வைக்கப்பட்டிருந்தபோது 'அவனுடைய கழுகின் கண்கள் திரையிடப்பட்டுவிட்டிருந்தன'' என்று பெம்பர் கூறினார் என்று நினைக்கிறேன். அவன் ஆகாயத்தில் இருந்தான். ஆனால் அவனுடைய தீர்க்கதரிசனம் முடிந்தவுடன் அவன் மறுபடியும் பூமியில் விழுந்து கிடந்தான். ஏனென்றால் சிறையில்

அடைக்கப்பட்டிருந்தான். நீங்கள் பாருங்கள், இப்பொழுது அவனுடைய பெரிய செட்டைகள் அவனுக்கு அவசியப்படவில்லை. ஆகவே, அவைகளை அங்கே மடக்கி வைத்திருந்தான். ஆனாலும், மற்றவர்களைக் காட்டிலும் அவன் உயர பறந்திருந்தான்.

257. நான் ஒன்றை சொல்லட்டும். தேவன் அவனை உபயோகப்படுத்தினார். இயேசு அதை அறிந்திருந்தார். ஏனென்றால் அவர் மாம்சத்தில் வந்த தேவனாயிருந்தார். பாருங்கள்? ஆகவே, அவர்-அவர் அங்கே கூறினார், அவர் கூறினார்...

அவன் சிறையில் எப்படி நடந்துக்கொள்ள வேண்டும் என்று அறிந்துக்கொள்ள அவனுக்கு ஒரு புத்தகம் கொடுக்கப்படவில்லை. "இப்பொழுது ஒரு நிமிஷம் பொறுத்திருங்கள். நான் ஒரு கட்டுரை எழுதப்போகிறேன். நீங்கள் அதைக் கொண்டுபோய் அவன் சிறையில் இருக்கும்போது என்னிமித்தமாக எப்படி நடந்துக்கொள்ள வேண்டும் என்பதை

அறிந்துக்கொள்ள யோவானிடம் கூறி இதை அவனிடம் கொடுங்கள்'' என்று அவர் கூறினாரா? பாருங்கள்? இல்லை, அவர் ஒருபோதும் அவ்விதம் கூறவில்லை.

258. ''அவன் வெளியே வருவதற்கு முன் வேத பாண்டியத்தில் தன்னுடைய டாக்டர் பட்டத்தை பெற்றுக் கொள்ளவேண்டும் என்று யோவானிடம் போய்ச் சொல்லுங்கள்'' என்று இவ்விதமாக அவர் கூறவில்லை. பாருங்கள்? வேண்டுமானால் அவனும் மற்றவர்களுடன் சேர்ந்துக் கொண்டு ஒரு புறக்கணிக்கிறவனாக இருந்திருக்கக்கூடும்.

யோவான் ஒரு உத்தமனாக இருந்து ஒரு கேள்வியைக் கேட்டான்.

259. ''கூட்டம் முடியும் வரை காத்திருந்து, என்ன நடந்ததோ அதை யோவானுக்குக் காண்பியுங்கள். அப்பொழுது அவன் அறிந்துக்கொள்வான். என்ன நடக்கின்றது என்று நீங்கள் அவனுக்குக் கூறினால், அப்பொழுது அவன்

அறிந்துக்கொள்வான்'' என்று அவர் கூறினார். பாருங்கள்? பாருங்கள்? 'அவனிடம் போய்.. அவனிடம் கூறுங்கள். அவனிடம் இது... அவன் சிறையில் இருக்கிறான், அவன் இங்கிருக்க முடியவில்லை, நீங்கள் கூட்டத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தீர்கள், என்ன நடந்ததோ அதைக் கண்டிருக்கிறீர்கள். நீங்கள் போய்ச் சொல்லுங்கள்,'' என்றார்.

அப்பொழுது அந்த சீஷர்கள் ''நல்லது, ஆண்டவரே'' என்று கூறினார்கள்.

260. அவர்கள் மலையைக் கடந்து சென்றார்கள். பாறையின் மீது இயேசு உட்கார்ந்துக்கொண்டு அவர்கள் கடந்து செல்லும் வரைக்கும் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார் - அவர்கள் மலை மீது ஏறி செல்லும் வரைக்கும்.

261. அவர் திரும்பி, சபையாரைப் பார்த்து, "யோவான் காலத்தில் யாரைப் பார்க்கப் போனீர்கள்? பாருங்கள்? எதைப் பார்க்கப் போனீர்கள்? தன்னுடைய 'காலர் பட்டையை அணிந்து' மெல்லிய வஸ்திரத்தை

அணிந்திருக்கும் நன்றாகப் படித்த, மெருகேற்றப்பட்ட மனிதனையா பார்க்கச் சென்றீர்கள்? அவ்விதமான மனிதனையா நீங்கள் காணச்சென்றீர்கள்?'' "இல்லை, அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா? அவர்கள் குழந்தையை முத்தமிட்டு, அரசனின் அரண்மனையில் வசிக்கிறார்கள். யோவான் அவ்வண்ணம் இருக்கவில்லை.''

262. "அப்படியானால் நீங்கள் ஏன் சென்றீர்கள்? தன்னுடைய ஊழியத்தை ஒரு ஸ்தாபனத்தோடு இணைத்துக்கொண்டு, எல்லாரோடும் கைகளைக் குலுக்கிக் கொண்டிருக்கும் மனிதனையா பார்க்கச் சென்றீர்கள்? ஒருத்துவக்காரர் வேண்டாம் என்று சொல்லும்போது திரித்துவக்காரரிடம் ஐக்கியம் கொள்ளுவதற்காக அவர்களிடம் செல்வதும்; திரித்துவக்காரர்கள் வேண்டாம் என்று சொல்லும்போது 'தேவனுடைய சபை' என்று அழைக்கப்படும் ஸ்தாபனத்திற்கோ அல்லது வேறெங்கேயோ செல்லுகிறார்கள். காற்றினால் அசையும் நாணலை

போலிருக்கும் மனிதனையா பார்க்கச் சென்றீர்கள்?'' என்று கேட்டார். "ஓ, இல்லை!- யோவான் அவ்விதமாக இல்லை.''

263. "அப்படியென்றால் எதைப் பார்க்கச் சென்றீர்கள்? - ஒரு தீர்க்கதரிசியை'' என்று அவர் கூறினார் "அதுதான் சரி என்று கூறுகிறேன், ஆனாலும் நீங்கள் அறிந்திராத ஒன்றைச் சொல்லப் போகிறேன், அவன் ஒரு தீர்க்கதரிசியிலும் மேலானவனாக இருந்தான். அவன் மேலானவன்...'' என்று அவர் கூறினார். ''நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வேதாகமத்தில் மல்கியா 3ல் இதோ எனக்கு முன்பாக நான் என் செய்தியாளனை அனுப்புகிறேன். அவன் எனக்கு முன்பாகப் போய் வழியை ஆயத்தம் பண்ணுவான் என்று சொல்லப்பட்டிருப்பவன் இவனே'' என்றார். பாருங்கள்?

264. அவர்கள் அதைப் புரிந்துக்கொள்ளவில்லை. சீஷர்களும் அதைப் புரிந்துக்கொள்ளவில்லை, பாருங்கள். அது சரி, ஓ! எளிமை-தாழ்மையுடன் இருங்கள். தேவன்,

மகத்துவமானதொன்றை வாக்குரைக்கும் போது-அது அவருடைய பார்வையில் மகத்துவமானதாகக் காணப்படுகிறது.

265. இப்பொழுது, நீங்கள் எப்பொழுதும் இதை மனதில் வைத்திருக்க விரும்பினால், நான் விரும்புகிறேன். இதை மனதில் வையுங்கள்! இது நடக்கும்போது, அப்பொழுது நீங்கள் இதை மாற்றிக்கொள்ளலாம். வசந்த காலத்தில் பூக்கும் சிறிய மலர்களில் ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். அல்லது ஒரு சிறிய புல்லை எடுத்து கையில் வைத்துக்கொண்டு, இப்பொழுது இதைப் பிடித்துக்கொண்டு "ஏதோ எளிமையானதொன்று இதைச் செய்திருக்கிறது; சந்திரனுக்கு ராக்கெட்டை அனுப்பி இருக்கும் அந்த மூளை இந்தச் சிறிய புல்லை செய்யமுடியுமா என்பதைக் காண விரும்புகிறேன்'' என்று சொல்லுங்கள். அதை நீங்கள் எப்பொழுதும் பெற்றிருப்பீர்கள். நீங்கள் அதன் மீது உறுதியாய் சார்ந்திருக்கலாம்; நீங்கள் அதை எப்பொழுதும் பெற்றிருக்கலாம், பாருங்கள்?

புல்லின் இலை தன்னில் ஜீவன் உள்ளதாய் இருக்கிறது. அது மிகவும் எளிமையானதாகவும், தாழ்மையானதாகவும் இருக்கிறது…

266. ஒரு மனிதன் பெரிய மனிதனாக இருப்பது சரிதான்; ஆனால் அவன் தன்னை எளிமையுள்ளவனாக்கிக் கொள்வதற்கு அவ்வளவு பெரியவனாக இருப்பானென்றால், அவன் தேவனைக் காண்பான். ஆனால் அவன் எளியவனாகவில்லையென்றால் அவன் அவரைக் காணவே முடியாது. நீங்கள் எளிமையுள்ளவர்களாக வேண்டும். இப்பொழுது…

# மணவாட்டி, அதாவது இந்த செய்தியை விசுவாசிப்பவர்கள், முடிவில் மேற்கில் சென்று அங்கு ஒன்று கூட வேண்டுமா?



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: 64-08-30E கேள்விகளும் பதில்களும் COD #23

376. மணவாட்டி, அதாவது இந்த செய்தியை விசுவாசிப்பவர்கள், முடிவில் மேற்கில் சென்று அங்கு ஒன்று கூட வேண்டுமா?

377. மேலும் (ஒரு நிமிடம், இது... ஒரு வினாடி. ஓ! இல்லை, அதுவல்ல. அது... நான் நினைத்தேன். அது வெளிப்படுத்தல் அதிகாரம், அது “சங்கை காப்ஸ்” என்பது போல் காணப்பட்டது, அதைக் குறித்து எனக்கு சிறிது குழப்பம் ஏற்பட்டது. அது... நீங்கள் காண்பீர்களானால், அது அப்படித்தான் காணப்படுகிறது. பாருங்கள்? அது "சங்கை காப்ஸ்" அதன் பிறகு தொடர்ந்து... இல்லை, அது சரி). வெளிப்படுத்தல் 12ம் அதிகாரம் மண வாட்டியைக் குறிக்கிறதா?

11. இல்லை! "மணவாட்டி முடிவில் மேற்கில் செல்வாளா?" எனக்குத் தெரிந்த வரையில் இல்லை; மணவாட்டி உலகின் எல்லா பாகங்களிலும் இருக்கிறாள். இதை புரிந்து கொண்ட ஒவ்வொருவரும் “ஆமென்” என்று சொல்லுங்கள் (சபையோர் "ஆமென்” என்கின்றனர் - ஆசி).

நீங்கள் எங்கிருந்த போதிலும், எங்கு மரித்த போதிலும், அது என்னவாயிருப்பினும், நீங்கள் கிறிஸ்துவுக்குள் மரித்தால், தேவன் உங்களை அவருடன் கூட கொண்டு வருவார். நீங்கள் சுட்டெரிக்கப்பட்டாலும், மிருகங்களால் புசிக்கப்பட்டாலும், அழிக்கப்பட்டாலும், அது எப்படியிருந்தாலும், கிறிஸ்து வரும்போது தேவன் உங்களை அவருடன் கூட கொண்டு வருவார் நீங்கள் மேற்கிலோ அல்லது வேறெங்கோ கூட வேண்டிய அவசியமில்லை கர்த்தர் உங்களை எங்கு நடத்துகிறாரோ...

12. இருப்பினும், நீங்கள் மேற்கில் செல்ல வேண்டுமென்று உங்களுக்குத்

தோன்றினால், நான் செல்வதற்கு முன்பு இதை தெளிவாக்க விரும்புகிறேன். இப்பொழுது... (அவர்கள் இந்த செய்தியை ஒலிநாடாவில் பதிவு செய்கின்றனரா? செய்கின்றனரா சரி), நீங்கள் எங்கு செல்ல வேண்டுமென்று நான் உங்களிடம் கூற வேண்டியதில்லை. நீங்கள் மேற்கில் செல்ல வேண்டுமென்று உங்களுக்குத் தோன்றினால், மேற்கில் வாருங்கள். நீங்கள் கிழக்கில், வடக்கில், மேற்கில், தெற்கில் செல்ல விரும்பினால் கர்த்தர் உங்களை எங்கு நடத்துகிறாரோ, அங்கு செல்லுங்கள். இதை புரிந்து கொண்ட ஒவ்வொருவரும் “ஆமென்" என்று சொல்லுங்கள் (சபையோர் "ஆமென்” என்கின்றனர் - ஆசி).

13. எங்கு போகக் கூடாது என்று நான் யாரிடமும் கூற முனைவதில்லை. நான் தற்காலிகமாக வாழ்ந்து கொண்டிருக்கும் அரிசோனாவிலுள்ள டூசானுக்கு நீங்கள் வர விரும்பினால்... இன்று காலையில் உங்களிடம் நான் கூறினது போல, எனக்கு போவதற்கு வீடு இல்லாமல், வீட்டிற்கு

செல்ல வேண்டுமெனும் எண்ணம் என்னில் உள்ளது. வீடு என்று அழைக்க எனக்கு ஓரிடம் இருக்குமானால் நலமாயிருக்கும்... இன்றிரவு, ஓரிடத்துக்கு நான் பதினாயிரம் டாலர்கள் கொடுத்து, "இதை என் வீடு என்று அழைக்க விரும்புகிறேன்" என்று கூற முடிந்தால், நான் தாராளமாக அதை கொடுத்து விடுவேன். எனக்கு போக்கிடமில்லை.

சகோ. ஃபரீமான், என்னை நீர் சிறு வயது முதற்கொண்டு அறிந்திருக்கிறீர் என்று நினைக்கிறேன்; நான் சுற்றித் திரிகின்றவன். நீங்கள் சுற்றித்திரிகின்றவர்களாக இருக்க வேண்டாம்: நீங்கள் ஆவல் கொள்ளும் ஏதாவதொரு இடத்தை கண்டு பிடித்து அங்கு தங்கியிருங்கள்; கர்த்தராகிய இயேசுவுக்காக காத்திருங்கள்.

14. ஆனால், இப்பொழுது நான் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மேற்கிலுள்ள அரிசோனாவிலுள்ள டூசானுக்கு நீங்கள் வர விரும்பினால், நீங்கள் வரவேற்கப்படுகின்றீர்கள்; உங்களை அங்கு

கொண்டிருப்பதில் எனக்கு மகிழ்ச்சியாயிருக்கும். நீங்கள் என் சகோதரனும் சகோதரியுமாய் இருக்கின்றீர்கள். உங்களுக்கு உதவி செய்ய நான் உலகில் எதையும் செய்வேன். அங்கு வந்திருக்கிற உங்கள் அனைவருக்கும் என்னாலான அனைத்தையும் செய்து உங்களை வரவேற்று.' எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் உங்களுக்குக் காண்பித்து, உங்களை' சுற்றிலும் கொண்டு சென்று, என்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்திருக்கிறேன், நீங்கள் எப்பொழுதும் வரவேற்கப்படுகிறீர்கள்.

15. ஆனால், மணவாட்டி - அரிசோனாவிலுள்ள டூசானி லிருந்து மட்டும் எடுக்கப்படுவாள் என்று எண்ணி, அந்த நிபந்தனையை நிறைவேற்றுவதற்க்கு. அங்கு வருவீர்களானால், நீங்கள் தவறு செய்கின்றவர்களாயிருப்பீர்கள். அதற்காக நீங்கள் அங்கு வராதீர்கள், அதற்காக நீங்கள் அங்கு வராதீர்கள், ஏனெனில் அது தவறு. அது சரியல்ல.

16. இப்பொழுது, வெளிப்படுத்தல் 12ம் அதிகாரம்... கர்த்தர் எனக்கு வெளிப்படுத்துகின்ற அல்லது என்னிடம் பேசுகின்ற ஒரு காரியம் என்னவெனில்... இப்பொழுது தான் நான் தரிசனங்களைக் கண்டு விட்டு வந்திருக்கிறேன் (பாருங்கள்?) அதிலிருந்து விலகியிருப்பது மிகவும் கடினமான செயல். பாருங்கள்? மேற்கில் செல்வதைக் குறித்து இன்னும் அதிகமாக நான் கூற வேண்டுமென்று அவர் என்னை மேலும் வற்புறுத்துவதாகத் தோன்றுகிறது.

17. இப்பொழுது, நான் ஏற்கனவே உங்களிடம் கூறினபடி, நான் அங்கு இருக்க வேண்டும் என்பதற்காக அங்கு இருக்கவில்லை. அங்கு போவதற்காக நான் நடத்தப்பட்டபடியால் அங்கு இருக்கிறேன். அங்கு தங்கி அதை என் இருப்பிடமாக்கிக் கொள்வது தவறு என்று எண்ணுகிறேன். தேவன் என்னை அங்கு அனுப்பின நோக்கம் நிறைவேறும் வரைக்கும் நான் அங்கு குறுகிய காலம் தங்கியிருக்க வேண்டுமென்று எண்ணுகிறேன். அங்கு நான் ஏன் செல்கிறேன்

என்று என்னால் உங்களிடம் இங்கு கூற முடியாது. ஆனால் அங்கு நான் போக வேண்டும் என்பதற்காக நான் போகமாட்டேன்.

18. அன்றொரு நாள் இவ்விதம். ஒரு கேள்வி கேட்கப் பட்டது: “நீர் முதல் முறையாக அரிசோனாவுக்கு ஏன் சென்றீர் என்று எங்களுக்குத் தெரியும், அப்பொழுது தூதர்கள் பிரத்தியட்சமாயினர். நீர் ஏன் இரண்டாம் முறை அங்கு திரும்பச்சென்றீர்?" அந்த கேள்வி படிக்கப்பட்டது உங்களுக்கு ஞாபகமுள்ளதா?

19. நான் அரிசோனாவுக்குச் சென்று திரும்பி வந்து அங்கு டாக்டர் லீ வேயிலுக்கு முன்பாக நானும் என் மனைவியும் உட் கார்ந்து கொண்டிருந்த போது (அவர் இப்பொழுது கட்டிடத்தில் எங்கோ இருக்கிறார் என்று நினைக்கிறேன்) நடந்தது உங்களுக்கு ஞாபகமுள்ளதா? நான் அரிசோனாவைக் குறித்தும் நாங்கள் இங்கு தங்குவதைக் குறித்தும் பேசிக் கொண்டிருந்த போது ஒரு கையுறுப்பு சுவற்றில் தோன்றி,

வெளிச்சமும் தோன்றி, "அரி சோனாவுக்குத் திரும்பிச்செல்" என்று எழுதினது. எத்தனை பேருக்கு அது ஞாபகமுள்ளது? ஆகையால் தான் அங்கு நான் மறுபடியும் சென்றிருக்கிறேன்: நான் ஏன் அங்கு திரும்பச்செல்ல வேண்டும் என்று அறியாதவனாய். அங்கு அடைந்த போது, நான் எதற்காகத் திரும்பச் செல்ல வேண்டும் என்பதை அவர் எனக்கு வெளிப்படுத்தினார். அதை நான் சொன்னால், சாத்தான் அதை தடுத்துப் போடுவான். ஆனால் என் இருதயத்தில் உள்ளதை அவன் அறியமாட்டான். அவன் வார்த்தை அல்ல, எனவே அவனால் இருதயத்தில் உள்ளதை அறிந்து கொள்ள முடியாது. அதை நான் "வாய் விட்டுக்கூறும் போது, அவன் அதை கேட்கிறான். எனவே இப்பொழுது, அதை ஞாபகம் கொள்ளுங்கள்.

20. இப்பொழுது, அன்றொரு நாள் நான் கூறின போது, நான் அதை ஒருவாறு... ஒருக்கால் உங்களுக்கு தவறான அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கக்கூடும். நான்,

"நீங்கள் அரிசோனாவுக்கு வராதீர்கள்' என்று சொன்ன போது, நீங்கள் வரக்கூடாது என்னும் அர்த்தத்தில் நான் கூறவில்லை. நான் என்ன அர்த்தத்தில் கூறினேன் என்றால், நீங்கள் அங்கு வருவதற்கு நடத்தப்பட்டால், முன்சென்று அதை செய்யுங்கள். நீங்கள் கலிபோர்னியா: அரிசோனா, அல்லது வேறெங்கு நடத்தப்பட்டாலும். ஆனால் நீங்கள். "சகோ. பிரான்ஹாமே, நீங்கள் அங்கு தங்கி வார்த்தையைப் பிரசங்கிக்கப் போகிறீர்கள் என்று நினைக்கிறேன், ஆகையால்தான் நான் அங்கு செல்கிறேன்" என்பீர்களானால், நீங்கள் அங்கு தவறு செய்கின்றீர்கள் என்று எண்ணுகிறேன். பாருங்கள்? என் பிரசங்கம் எங்கிருக்குமென்றால், அது இந்த கூடாரத்தில் தான்; இதுதான் அந்த இடம்.

21. எனக்கு அரிசோனாவில் ஒரு ஆராதனையும் கூட இல்லை. நான் ஒவ்வொரு முறையும் சில மணி நேரங்கள் மட்டுமே அங்கு இருக்கிறேன். எனக்கு... கிறிஸ்துமஸுக்குப் பிறகு எனக்கு பீனிக்ஸில்

வர்த்தகர்களின் கூட்டம் ஒன்றுள்ளது. இதுவே இவ்வாண்டுக்கு அங்கு முதல் கூட்டம். அவ்வளவு தான் எனக்குள்ளது. நான் வாக்கு கொடுத்திருந்தேன்; வேறொரு கூட்டம் எதுவும் எனக்கில்லை.

22. என்னுடைய அடுத்த கூட்டம், எனக்குத் தெரிந்த வரையில், எய்த் அண்டு பென் தெருவிலுள்ள இந்த பிரான்ஹாம் கூடாரத்தில் தான். எனக்கு பேசுவதற்கு முப்பது அல்லது நாற்பது பொருட்கள் உள்ளன. இவைகளை ஒரேயடியாக பேச வேண்டு மென்றால் ஒன்று அல்லது இரண்டு வாரங்கள் பிடிக்கும். இதுவே நான் ஜெபர்ஸன்வில், இந்தியானாவிலுள்ள பிரான்ஹாம் கூடாரத்தில் பிரசங்கிக்க வேண்டுமென்று என் இருதயத்தில் உள்ள தாகும்.

23. இப்பொழுது, வார்த்தையில் நிலைத்திருப் பதற்கென, நமது செய்தி பிரசங்கிக்கப்படும் ஏதாவதொரு இடத்துக்கு நீங்கள் செல்ல விரும்பினால் நமது செய்தி ஒன்றும் வித்தியாசமானது அல்ல, அது

உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் கேட்ட அதே செய்திதான், அதனுடன் கூட இன்னும் சில காரியங்கள் வெளிப்படுத்தப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளன என்பது மாத்திரமே. இந்த செய்தி லூத்தர் பிரசங்கித்த அதே செய்தி, வெஸ்லி பிரசங்கித்த அதே செய்தி, பெந்தெகொஸ்தேயினர் பிரசங்கித்த அதே செய்தி அதனுடன் கூட சில காரியங்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்பது மாத்திரமே. அது என்னவென்றால் சீர்திருத்தக்காரர்கள் விட்டுச்சென்ற முத்திரைகள் வெளிப்படுத்தப்பட்டது (பாருங்கள்?), அது இந்த காலத்தில் அறிந்து கொள்ளப்பட்டது, அவர்களால் அது அறிந்து கொள்ளப்பட முடியவில்லை. பெந்தெகொஸ்தே செய்தியானது லூத்தர் அல்லது வெஸ்லியின் நாட்களில் அறிந்து கொள்ளப்பட முடியவில்லை, அது பெந்தெகொஸ்தே காலம் வரைக்கும் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. பெந்தெகொஸ்தே காலம் என்பது லூத்தரின் காலத்தை விட சற்று முன்னேற்ற மடைந்த காலமேயன்றி

வேறல்ல. தானியம் வெவ்வேறு கட்டங்களில் முதிர்வடைவதைப் போல, சபையும் முதிர்வடைகிறது.

24. இன்றிரவு நான் பிரசங்கித்திருந்தால், எகிப்திலிருந்து பாலஸ்தீனாவுக்கு மாற்றப்பட்ட திராட்சை செடி என்னும் பொருளின் பேரில் பிரசங்கம் பண்ணியிருப்பேன். இதை வேதத்தில் குறித்து வைத்திருக்கிறேன். இஸ்ரவேல் தமது திராட்சை செடி என்று தேவன் கூறியுள்ளார் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? அதிலிருந்து இயேசு திராட்சை செடியாயிருப்பதைக் குறிக்கும் இடத்துக்கு வருகிறேன். இப்பொழுது அது சபை உலகத்துக்கு மாற்றப்பட்டு, அழுக்கில் உட்கார்ந்திராமல், கிறிஸ்துவுடன் கூட உட்கார்ந்திருப்பதால், அது கனி கொடுக்க வேண்டும். பார்த்தீர்களா? இன்றிரவு நான் பிரசங்கம் பண்ணியிருந்தால், அதுவே என் செய்தியாய் இருந்திருக்கும். ஆனால் கேள்விகளுக்கு பதிலளிப்பது நலமாயிருக்குமென்று கருதி பிரசங்கம்

பண்ணும் எண்ணத்தை கைவிட்டு விட்டேன். நான் திரும்பி வரும்போது, ஒருக்கால் இந்த பொருளை எடுத்துக் கொள்வேன்.

25. வெளிப்படுத்தல் 12ம் அதிகாரம் மணவாட்டியுடன் சம்பந்தப்பட்டதல்ல. வெளிப்படுத்தல் 12ம் அதிகாரம் (அதை நான் பார்க்கவில்லை, ஆனால் அது எனக்குத் தெரியும்) அது ஸ்திரீ சூரியனில் நின்று கொண்டு பாதங்களின் கீழே சந்திரன் இருப்பதாகும். சந்திரன் நியாயப்பிரமாணத்துக்கு எடுத்துக்காட்டாய் உள்ளது; ஸ்திரீ இஸ்ரவேலாகிய சபைக்கு எடுத்துக்காட்டாய் இருக்கிறாள்; அவளுடைய நெற்றியில் உள்ள பன்னிரண்டு நட்சத்திரங்கள் அந்த பன்னிரண்டு அப்போஸ்தலர்களை, கடந்துபோன சபை காலங்களைக் குறிக்கிறது. பாருங்கள்? சூரியன் அவளுடைய தலையில் இருந்தது. சந்திரன் சூரியனின் நிழலாயுள்ளது, அவ்வாறே நியாயப்பிரமாணமும் வரப்போகும். நல்ல காரியங்களுக்கு

நிழலாயுள்ளது. அந்த ஸ்திரீ இஸ்ரவேல், மணவாட்டி. அலல.



# மணவாட்டி

## என்பதின் பேரிலான கேள்விகளும் பதில்களும்